LIBRARY 7 - JUL 1958

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 15th November 1957.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER : இன்றைக்கு 30 கேள்விகளுக்கு மேல் இருக்கின்றன. அவை எல்லாவற்றையும் முடித்துவிடலாம். அவசியமிருந்தாலொழிய அதிகமான உப கேள்விகள் போடவேண்டாம் என்று கனம் அங்கத்தினர்களை கேட்டுக்கொள்கிறேன்.

Local Development Works

* 171 *Q.*—SRI A. R. SUBBIAH MUDALIAR : Will the Hon. the Chief Minister be pleased to state the amount spent in each district under Local Development Works for three years ending with March 1957 for Water-supply Schemes and other schemes separately?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir. A statement [a] is placed on the table of the House.

* 172 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have received any proposals recently from the Coimbatore District Planning and Development Board for taking up new Local Development Works or National Extension Service Schemes, in the Bhavani taluk in Coimbatore district; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) The question does not arise.

SRI A. R. SUBBIAH MUDALIAR : இதை மேற்கொண்டு நடத்துவதற்கு சர்க்காரிடம் யோசனை இருக்கிறதா? லோகல் டெவலப்மெண்ட் வொர்க்ஸுக்கு பட்ஜெட்டிலும் தொகை ஒதுக்க வில்லை ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றி ஆலோசனை செய்து கொண்டிருக்கிறோம்.

SRI S. LAZAR : ஸார், உள்ளபடியே கிராம மக்களுக்கு, கிராமம் சம்பந்தப்பட்ட லோகல் டெவலப்மெண்ட் வொர்க்ஸ் திட்டம் மிக உபயோகமாயுள்ளது என்ற அடிப்படையில் இந்தத் திட்டத்தை மறுபடியும் கொண்டு வர சர்க்கார் முயற்சிக்குமா ?

---

[a] Printed as Appendix I on page 396 infra.